பக்கங்கள் நான்கு Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆடி 12 செவ்வாய்க்கிழமை (27-07-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 241

## மணலாற்றில் கைப்பற்றப்பட்ட

# படையினரின் சடலங்களை

# புலிகள் இன்று ஒப்படைப்பர்

## செஞ்சிலுவை குழுவினரிடம் வவுனியாவில் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 27

மணலாறு தாக்குதலில் தாம் கைப்பற்றிய படையினரின் 17 சடலங்களை—அரசாங்கத்திடம் கையளிப்பதற்காக—இன்று அவற்றை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினரிடம் புலிகள் ஒப்படைப்பர்.

இந்தச் சடலங்களை வவுனியாவில் வைத்து விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளிடமிருந்து செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் வவுனியா வதிவிடப் பிரதிநிதி செல்வி எலிஸெபத் இன்று பொறுப்பேற்பார் என அறிவிக்கப்பட்டது.

## சாதுரியமான தாக்குதல்! ராணுவ அதிகாரி கூறுகிறார்

மணலாறு தாக்குதலை விடுதலைப் புலிகள் மிகச் சாதுரியமாக மேற்கொண்டிருக்கிறார்கள் என்பதை ஸ்ரீலங்கா இராணுவம் ஒப்புக்கொண்டிருக்கிறது.

கடந்தவார இறுதியில் புலிகளின் தாக்குதலுக்கு இலக்கான புத்தளம் பகுதியைப் பலப்படுத்துவதற்காக, ஜானகபுர (மண்கிண்டிமலை) இராணுவ முகாமிலிருந்து ஒரு பகுதி கொமாண்டோப் படையினர் புத்தளத்துக்கு அனுப்பப்பட்டிருந்தனர் என்றும் —

புலிகள் படையினரின் நகர்வை உன்னிப்பாக அவதானித்து, மிகச் சாதுரியமாக முகாம் பலமிழந்திருந்த வேளையில் அதன்மீது அதிரடித் தாக்குதலை நடத்தி அதனைக் கைப்பற்றியுள்ளனர் என்றும்— இராணுவ அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

## முக்கிய தொடர்பு கருவியை படை புலிகளிடம் இழந்தது

மணலாறு மண்கிண்டிமலை இராணுவ முகாம் தாக்குதலின்போது விடுதலைப் புலிகள் கைப்பற்றிய தகவல் தொடர்பு கருவிகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை என்றும்—

புலிகள் கைப்பற்றிய ஆயுதங்களில் 81 மி. மீ மோட்டார் ஆயுதம் மிக முக்கியமானது என்றும் கருதப்படுவதாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

## தொலைத் தொடர்பு கருவி செயல் இழந்திருந்ததாம்!

மணலாறில் மண்கிண்டிமலை இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்திய சமயம் அந்த முகாமின் தொலைத் தொடர்பு சாதனம் செயல் இழந்திருந்ததாம்.

இதனால் புலிகளின் தாக்குதல் பற்றி அறிந்து கொள்வதில் தாமதம் ஏற்பட்டதாக இராணுவ அதிகாரி ஒருவர் செய்தி ஏஜென்ஸி ஒன்றுக்குத் தெரிவித்திருக்கிறார். (உ-6)

## தகர்க்கப்பட்ட முகாம் மீள அமைக்கப்படுகிறது

நேற்று முன்தினம் புலிகள் தாக்கி அழித்த மண்கிண்டிமலை இராணுவ முகாம் பகுதியில் மீண்டும் இராணுவத்தினர் முகாமினை அமைத்து வருவதாக கூட்டுப் படைத் தலைமையகம் நேற்று அறிவித்தது. (உ-6)

## ஆத்திரமுற்ற படையினர் தமிழரைத் தாக்கினர்

மணலாறில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலினால் ஆத்திரமடைந்த இராணுவத்தினர் மாத்தறை நகரில் தமிழ்த் தொழில் அதிபர் ஒருவரை தாக்கிப் படுகாயமடையச் செய்தனர் என்று ''ராய்ட்டர்'' செய்தி ஸ்தாபனம் அறிவித்திருக்கிறது.

படுகாயமுற்ற தொழில் அதிபர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

சிவில் உடையில் சென்ற படையினரே இத்தாக்குதலை நடத்தினர்.

மணலாறில் விடுதலைப் புலிகளின் தாக்குதலில் உயிரிழந்த சிப்பாய்களில் 16 பேர் மாத்தறையைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

## வீரச்சாவடைந்த வேங்கைகளுக்கு மக்கள் அஞ்சலி!

யாழ்ப்பாணம், ஜூலை 27

மணலாறில் வீரச்சாவடைந்த பத்து வேங்கைகளுக்கும் குடாநாட்டில் நேற்று அஞ்சலி செலுத்தப்பட்டது.

பல இடங்களில் சோக இசை ஒலிபரப்பப்பட்டது. வீதிகளிலும் வாகனங்களிலும் கறுப்புக் கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன. வாழை தோரணங்களும் பல இடங்களில் கட்டப்பட்டிருந்தன.

(உ 5-15-28 51-143-162)

## அரச தரப்பு 60பேரை மணலாற்றில் இழந்தது

மணலாறு மண்கிண்டிமலை இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலின் போது 60 பேரை ஸ்ரீலங்கா அரச தரப்பு இழந்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

25 படையினர் உயிரிழந்ததாகவும் 18 இராணுவத்தினர் காணாமல் போயிருப்பதாகவும் ஸ்ரீலங்கா அரச தரப்பு தெரிவித்துள்ளதாக ரூபவாகினி அறிவித்தது.

இது தவிர 17 சிங்களவர்கள் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஆயுதம் தாங்கிய பொதுமக்களே உயிரிழந்தனர் என பி. பி. ஸி. முன்னர் அறிவித்தது தெரிந்ததே.

இத்தாக்குதலில் 29 படையினர் காயமடைந்ததாக ஸ்ரீலங்கா அரச வட்டாரங்கள் தெரிவித்தன.

# மன்னாரில் குண்டு வீச்சு!

யாழ்ப்பாணம், ஜூலை 27

மன்னார் மாவட்டத்தில் நேற்று பரவலாக ''புக்காரா'' விமானங்கள் பலத்த குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

இரண்டு 'புக்காரா' விமானங்கள் நேற்றுக் காலை 8 மணியளவில் பரப்புக் கடந்தான் காட்டுப் பகுதியில் குண்டுகளை வீசின.

இதனையடுத்து நண்பகல் 12 மணியளவில் பண்டிவிரிச்சான் பகுதியை வட்டமிட்ட இரண்டு 'புக்காரா' விமானங்கள் அங்குள்ள காட்டுப் பகுதியில் குண்டுவீச்சுத் தாக்குதலை மேற்கொண்டன.

இக்குண்டு வீச்சுக்களின் போது ஏற்பட்ட சேதவிவரங்கள் தெரியவரவில்லை.

இதனைத் தொடர்ந்து மன்னார் மருதமடுப் பகுதியிலும் நண்பகல் 12.10 மணியளவில் ''புக்காரா'' விமானங்கள் ஜீவோதயா விவசாய பண்ணையை நோக்கி குண்டு வீச்சை நடத்தின. இத் தாக்குதலில் ஒரு வீடு பலத்த சேதமடைந்தது. அப்பகுதியில் 22 மி. மீ. ஷெல் தாக்குதலும் நடத்தப்பட்டது. (உ-8)

## கறுப்பு ஜூலை தினம் இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 27

இன்று கொண்டாடப்படும் கறுப்பு ஜூலை தினத்தை யொட்டி மாணவர்கள், அரச ஊழியர்கள், மற்றும் அனைத்து தமிழீழ மக்களும் கறுப்புப் பட்டி அணிந்து தமது அன்றாட கருமங்களை கவனிப்பர் என்று தெரிவிக்கப்படுகிறது.

மக்கள் களியாட்டங்களை தவிர்த்துக் கொள்வர். கடைகள், பாடசாலைகள், அலுவலகள், மற்றும் பொது அமைப்புக்கள், சனசமூக நிலையங்களில் கறுப்புக் கொடிகள் பறக்க விடப்பட்டிருக்கும். (உ-8)

## மிதிவெடியில் கால் இழந்தார்

யாழ்ப்பாணம், ஜூலை 27

பெரிய விளானில் நேற்று கள்ளிறக்கச் சென்ற தொழிலாளி ஒருவர் மிதிவெடியில் சிக்குண்டு வலது கால் பாதத்தை இழந்தார்.

பெரியவிளானில் இருந்து இடம்பெயர்ந்து மானிப்பாய் அகதி முகாம் ஒன்றில் வசித்து வந்த 6 பிள்ளைகளின் தந்தையான இசிதோர் பத்திநாதர் (வயது 42) என்பவரே படுகாயமுற்றவராவார். இவர் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். (உ-15)

## பயணிகளுடன் 'குமண' வெள்ளியன்று புறப்படும்

யாழ்ப்பாணம். ஜூலை 27

பருத்தித்துறையில் தரித்து நிற்கும் ''குமண'' கப்பல், கொழும்புக்கு கடமைக்காக செல்லும் அரச ஊழியர்களை ஏற்றிக்கொண்டு எதிர்வரும் வெள்ளிக்கிழமை திருமலைக்குப் புறப்படும்.

இக்கப்பல் சனிக்கிழமையே திருமலைக்குப் புறப்படும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

பருத்தித்துறையில் இருந்து திருகோணமலை வரை செல்ல விண்ணப்பித்தவர்களை நாளை புதன்கிழமை தமது அலுவலகத்திற்கு சமுகமளித்து பதிவுகளைச் செய்து கொள்ளுமாறும்—

கொழும்பில் சிகிச்சை மேற்கொள்ள யாழ். போதனா வைத்தியசாலை மருத்துவ குழுவால் தெரிவு செய்யப்பட்டவர்களும், குடும்ப மீள் சேர்தல் திட்டத்தின் கீழ் பயணம் செய்ய உறுதிப்படுத்தப் பட்டவர்களும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்குயாழ். போதனா வைத்தியசாலை வளாகத்துக்கு பிரயாணத்துக்குத் தயாராக வருமாறும்— செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் நேற்று பரவலாக ஷெல் தாக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 27

யாழ். குடாநாட்டில் உள்ள இராணுவ முகாம்களிலிருந்து நேற்றும் நேற்று முன்தினம் இரவும் பரவலாக ஷெல் தாக்குதல்களும் மற்றும் துப்பாக்கிப் பிரயோகங்களும் மேற்கொள்ளப்பட்டன.

நேற்றுக் காலை 6.15 மணி முதல் சுமார் இரண்டு மணி நேரம் பொன்னாலை இருவடி நிலை கடலில் இருந்து பொன்னாலை, நெல்லியான், சுழிபுரம் பகுதிகளை நோக்கி கடும் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

கடற்படைப் படகுகளில் இருந்து ஏவப்பட்ட பீரங்கிக் குண்டுகள் குடிமனைகளுக்கு மேல் பலத்த சத்தத்துடன்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ் மாவட்டத்தில் 400 தொண்டர் ஆசிரியருக்கு விரைவில் நிரந்தர நியமனம்

யாழ். மாவட்டத்தில் மேலும் 400 தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க யாழ். கல்வி அலுவலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

1989 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதிக்கும், 1990 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றியவர்களுக்கே நிரந்தர நியமனம் வழங்கப் படவிருக்கிறது.

இது தொடர்பாக நேற்று வரை விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தவர்களின் பட்டியல் தயார் செய்யப்படுவதாகவும்—

அவை இன்று கொழும்புக்கு எடுத்துச் செல்லப்படவிருப்பதாகவும்— தெரிவிக்கப்பட்டது. (உ-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

புதிய லுமாலா ஆண்கள் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு விலாசம்; கா. சிவதாசன், இல. 6, பெஸ்தகொஸ்தே ஒழுங்கை, கண்டி வீதி, கச்சேரியடி, கண்டிக்குளி. (26655)

லாண்ட் மாஸ்ரர் ட்ரேயிலர் மட்டும் விற்பனைக்குண்டு. பார்வையிடலாம்: மணியம்ஸ் (333) 285, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (26684)

புதிய முதிரைப் பலகைகள் விற்பனைக்குண்டு. அகலம் 12 அங்குலம் முதல் 24 அங்குலம் வரை. விலை சதுர அடி ரூபா 110/- முதல் ரூபா 130/- வரை. புதிய பாவை, முதிரை நிலைகளும் விற்பனைக்குண்டு. கு வல்லிபுரம், இராமலிங்கம் வீதி, (மடமாவடி), திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். [26685]

### உடன் விற்பனைக்கு

ஒரு மாதம் வளர்ந்த கைலைன் பிறவுண் சேவல் குஞ்சுகள், இரண்டு கிழமைகள் வளர்ந்த புறொயிலர் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. மல்லிகாபதி, சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். [26686]

### மலிவு விற்பனை

இந்திய சஞ்சிகைகள், சமயப் புத்தகங்கள் மலிவு விலையில் விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தகசாலை, நல்லூர். (சி 5528)

### தேவை

5 வருட அனுபவமுள்ள பக்கம் கட்டுபவர், பைண்டர், அச்சுக்கோப்பவர் (பெண்) தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும்: ஏ. எஸ். ஜே. பிரின்ரிங் வேக்ஸ், மல்லாகம். (6604

### மணமகள் தேவை

வயது 38, 7இல் செவ்வாய், அவிட்டம் 2, சுமாரான வருமானமுள்ளவர். சீதனம் வசதிக்கேற்ப, பூரண விவரங்கள் அனுப்பவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு முன்னுரிமை. இல. 548, C/o உதயன், யாழ்ப்பாணம் (26677)

### சோதிடம்

எத்தகைய தீராத பிரச்சினைகளும் தீர, கல்வித் தடை, விவாகத் தடை, தொழில் தடை தீர சாதகத்துடன் வரவும் பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம். ஸ்ரீ சக்தி கணேஷ உபாசகர், ஸ்ரீ மாவை விநாயகர் சோதிட நிலையம், 158, கோவில் வீதி, நல்லூர். (26658)

### புலமைப் பரிசில் பரீட்சை

Bond கல்வி நிறுவனத்தால் ஒவ்வொரு ஞாயிறும் வெளிவிடப்படும் ஆண்டு - 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான மாதிரிப் பயிற்சி வினாத்தாள்கள் பூபாலசிங்கம் புத்தகசாலை, மகிமைலன் புத்தகசாலை, யாழ்ப்பாணம் S. K சாமி- நெல்லியடி, பளிங்கு- சாவகச்சேரி ஆகிய இடங்களில் பெற்றுக்கொள்ளலாம். (6366)

### விவாக சேவை

யாழ்ப்பாண பாரம்பரிய வழமைக்கேற்ப உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்களை தெரிவு செய்ய ஸ்ரீ மாவை விநாயகர் சோதிட நிலையம், 158, கோயில் வீதி, நல்லூர் வடக்கு. (26660)

## கொடிகாமத்தில் நினைவாலயம்

1991 இல் ஆனையிறவில் இடம்பெற்ற ஆகாய கடல் வெளி நடவடிக்கையின் போது வீரச்சாவடைந்த மாவீரர்களின் நினைவாக கொடிகாமத்தில் அமைக்கப்பட்ட நினைவாலயம் எதிர்வரும் 31 ஆம் திகதி திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்த வைபவத்தில் விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொள்வர். [இ 117]

## உடனடியாகத் தேவை

★ அச்சுக்கோப்பாளர்
★ பக்கங்கட்டுவோர்

மேற்படி தொழில்களில் தகைமையும் அனுபவமும் உள்ளவர்கள்

**இராசன் அச்சகம்**

144, அருச்சுனா வீதி, யாழ்ப்பாணம் அலுவலகத்திற்குச் சமூகம் தரவும். (26692)

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 09 10 1924

மறைவு: 10 08 1989



**அமரர் சுப்பிரமணியம் குருநாதன்**

(சட்டத்தரணி)

(முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்)

திதி: 27 — 07 — 1993

''ஆண்டுகள் எத்தனை சென்றாலும் உங்கள் நினைவலைகள் என்றும் எம்மை விட்டு நீங்காது.''

உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கும்:

மனைவி, மக்கள்.

13/3, கச்சேரி கிழக்கு ஒழுங்கை,
கண்டிக்குளி. (26681)

## இன்னமுந்தான் செல்வம் இங்குன்னைத் தேடுகின்றோம்



புங்குடுதீவு 8 ஆம் வட்டாரத்தைப் பிறந்தகமாகவும் 3 ஆம் வட்டாரத்தைப் புகுந்தகமாகவும் கொண்ட

அமரர்

**நடராஜா செல்வரெத்தினம்**

அருந்தவப் புதல்வனாய் அவனிக்கு வந்தது: 26 — 10 — 1953

திரும்பி வருவேனெனச் சொல்லி சிலாபத்துக்குச் சென்றது: 27 — 07 — 1990

மூன்று வருடங்கள் முடிந்துவிட்டதம்மம்மா
இன்னமுந்தான் செல்வம் இங்குன்னைத் தேடுகின்றோம்
கோட்டிலகப்பட்ட குற்றமில்லா உற்றாரை
நீதி —
காட்டி அழைத்துவர —
சிலாபத்தை நோக்கிச் சென்றவன் நீ
இன்று வருவாய்; இனித்தான் வருவாய்
என்று —
இன்றுவரை எங்கள் இனியவனே!
நாங்கள் உன்னை -
தேடுகின்றோம் .......!
தேடுகின்றோம்; தேடுகின்றோம்!
தேடித் தவிக்கின்றோம்
மூன்று வருடங்கள் முடிந்துவிட்டதம்மம்மா
இன்னமுந்தான் செல்வம் இங்குன்னைத் தேடுகின்றோம்!
பாரத சோதிடர்கள், பார்த்தறியாச் சாஸ்திரிகள்
நேராத கோயில்கள் நிலத்தினிலே இல்லையப்பா
எங்கேயிருக்கின்றாய்? எப்படித்தான் வாழ்கின்றாய்?
இங்கெமக்கு ஒரு செய்தி எழுதமுடியா நிலையா?
மூன்று வருடங்கள் முடிந்துவிட்டதம்மம்மா
இன்னமுந்தான் செல்வம் இங்குன்னைத் தேடுகின்றோம்.

தாங்கொணாத் துயரில் ஏங்கித் தவிக்கும்;
குடும்பத்தினர்.

309, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம். (6373)

## யாழ். ஆஸ்பத்திரிக்கு நவீன 'எக்ஸ்றே' கருவி

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு நவீன ''எக்ஸ்றே'' கருவி ஒன்றை சுகாதார மகளிர் விவகார அமைச்சு வழங்கியுள்ளது.

இந்த ''எக்ஸ்றே'' கருவி குமண கப்பலில் இங்கு எடுத்துவரப்பட்டுள்ளது.

இந்த ''எக்ஸ்றே'' கருவி இங்கு வந்து சேர்ந்திருப்பதால் எக்ஸ்றேக்காக கொழும்பு செல்லும் நோயாளர்களின் எண்ணிக்கையைக் குறைக்க முடியும் என்று போதனா வைத்தியசாலை உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-17)

## BOND கல்வியகம்

**AL/95**

Chemistry

திரு மகாதேவா

சனி — ஞாயிறு

9 00 A. M

அனுமதிக்கான இறுதி நாள்

31—07—93

வகுப்பு ஆரம்பம்:

01—08—93

[26695]

## விக்னா கல்வி நிறுவனம்

பிரத்தியேக வகுப்பு

94

அலகு ரீதியான வினா-விடை மீட்டல்

கணக்கியல்

ஆரம்பம்:

01-08-1993

2-00 — 4-00

S.K. பிரபாகரன்

(சி-5519)

## சீட்டிழுப்பு ஒத்திவைப்பு

திருநெல்வேலி காளிகோவிலடி இந்து இளைஞர் மன்றத்தால் 3 - 6 - 93 இல் நடத்தப்படவிருந்த அபிவிருத்தி நிதிக்கான அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்கமுடியாத காரணத்தால் 27-8-93 வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான மண்டபத்தில் நடத்தப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

(26694) - நிர்வாகத்தினர்.

## அறிவித்தல்

லங்கா சோல்ட் லிமிட்டட் - வடபிராந்தியம் சேவையிலிருந்து சுய விருப்பத்தின் பேரில்

**இளைப்பாறுதல்**

சுயவிருப்பத்தின் பேரில் சேவையிலிருந்து இளைப்பாற விரும்புவோருக்கு நஷ்டஈடு எந்த அடிப்படையில் வழங்கப்படும் என்ற சுற்றறிக்கை நிருபம் தலைவரால் எனக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இவ்விடயத்தை சகல நிரந்தர ஊழியர்களின் கவனத்துக்கு அறியத் தருவதோடு, இது விடயமாக இறுதி முடிவு எடுப்பதற்கு சகல ஊழியர்களும் 30-07-1993 வெள்ளிக்கிழமை தவறாது பிராந்திய செயலகத்துக்கு சமூகம் கொடுக்கவும்.

தி. ஸ்ரீஇராமநாதன்,
பிராந்திய முகாமையாளர்.

லங்கா சோல்ட் லிமிட்டட்,
வடபிராந்தியம்,
மிருசுவில்.
26-07-93 (சி/5518)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு: 19 — 07 — 1982

உதிர்வு: 06 — 08 — 1992

திதி: 27 — 07 — 1993



**செல்வி தம்பிராசா சர்விழி**

(ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை-மாணவி)

எங்கள் அன்புச் செல்வமே செல்லக்கிளியே! உங்கள் ஆத்மா சாந்திக்காக எங்கள் உள்ளக் கோயில்களில் அன்பு மலர் தூவித் துதிக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா, அக்காமார்,
அண்ணாமார், உறவினர்கள்.

கோட்டைக்காடு,
மல்லாகம். (6377)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### ஆன்ம பலமாக்குவோம்

ஈழத் தமிழர்களின் உரிமைப் போராட்டத்தைப் புதிய வழிக்குத் திசைதிருப்பிய 1983 ஆம் ஆண்டின் கறுப்பு ஜூலை என்றும் மறக்க முடியாத ஒன்று. அது பல வழிகளில் புதிய வரலாற்று வடிவங்களுக்குக் காரணமாக இருந்தது.

தமிழர்கள் சிறுபான்மையினராக இருப்பதால் அவர்களை இராணுவ அடக்குமுறை கொண்டு அடிமைப்படுத்த முடியாது என்று தமிழ் இளைஞர்கள் இலங்கை அரசுக்கும் சிங்கள பௌத்த பேரினவாதத்துக்கும் எடுத்துச் சொன்னது ஜூலை 23 ஆம் நாள்.

தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை நசுக்குவதற்காக தமிழர் தாயகத்தில் கட்டவிழ்த்துவிடப்பட்ட அரச பயங்கரவாதம் இலங்கை முழுவதிலும் வாழும் அனைத்துத் தமிழ் மக்களுக்கும் எதிரான அரச பயங்கரவாதமாக மாறியது 1983 ஜூலை 24, 25, 26 ஆம் திகதிகளிலாகும்.

கனத்தை இடுகாட்டில், திருநெல்வேலியில் கொலையுண்ட 13 இராணுவ வீரர்களினதும் சடலங்களைத் தகனம் செய்வதற்கு சிதைகளுக்கு மூட்டப்பட்ட தீ, 24ஆம் திகதி இரவு பத்தரை மணிக்குப் பின்னர் கொழும்பு வாழ் தமிழர்களுக்கும், அவர்தம் உடைமைகளுக்கும் வைக்கப்பட்ட பெருநெருப்பாக தலைநகரத்திலும் அதன் புறநகர்ப் பகுதிகளிலும் கொழுந்துவிட்டெரிந்தது.

எனினும் தமிழர் விரோத வன்செயல்களை ஒடுக்குவதற்கு அரசு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. படையினரும், காடையர்களும் நடத்திய இனப்படுகொலை, தீ வைப்பு, கற்பழிப்பு, சூறையாடல் போன்ற காட்டுமிராண்டித் தனங்களை அரசு கைகட்டிப் பார்த்துக் கொண்டிருந்தது. இந்தக் கொடூரச் செயல்களைத் தூண்டிவிட்டதே அரசாக இருக்கும்போது எப்படி அது தடுப்பு நடவடிக்கைகளை எடுக்கும்?!

போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம் என்று நாடாளுமன்றில் முரசம் கொட்டிய ஜே. ஆர் திருநெல்வேலியில் நடந்த "போருக்கு" பதிலடியாகத் தென்னிலங்கை முழுவதிலும் படையினர்களையும், காடையர்களையும் கொண்டு வெறியாட்டப் 'போர்' நடத்துவித்தார். இரண்டு முழு நாட்களுக்கு மேல் பல்லாயிரக் கணக்கில் தமிழர்கள் கொல்லப்பட்டும், பலகோடி உடைமைகள் சேதமாக்கப்பட்டதன் பின்னருமே ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது!

வெலிக்கடைச் சிறையில் இருந்த தமிழ்ப் போராளிகளில் 36பேர் 25 ஆம் திகதி கொல்லப்பட்டார்கள். உலகத்துக்கு ஒப்பனைக்காக எஞ்சியவர்கள் பாதுகாப்புக் கருதி வேறு பிரிவுக்கு மாற்றப்பட்டனர். ஆனால் பேருக்காகப் பிறப்பிக்கப்பட்ட அவசரகாலச் சட்டமும் ஊரடங்கு விதியும் நடைமுறைக்கு வந்தபின்னர் 27 ஆம் திகதி மீண்டும் இன வெறியாட்டம் நடத்தி அரச பாதுகாப்பில் இருந்த கைதிகளில் 17 பேர் குரூரமாகக் கொலை செய்யப்பட்டனர்.

மொத்தத்தில் திருநெல்வேலித் தாக்குதலுக்கு தென்னிலங்கையில் நடந்த இன வெறிப் பதிலடியை அரசாங்கமே நடத்தியது என்பதில் சந்தேகமிருக்கவில்லை. அந்த அரச பயங்கரவாதம் "கறுப்பு ஜூலையாக" உலகத்துக்கு அறிமுகமாகியது! சிங்களவரின் சுய உருவம் உலகத்துக்கு அவர்களாலேயே தெரியப்படுத்தப்பட்டது!

திருநெல்வேலித் தாக்குதலும், கறுப்பு ஜூலையும் தமிழர் போராட்டத்தின் பெரும் திருப்புமுனையாகின. அவற்றினால் தான், எதிரியின் தாக்குதல்களுக்கு சோடை போகாது ஈடு கொடுக்கும் உறுதியின் உறைவிடங்களாக ஈழத்தமிழர்கள் நிலைத்து நிற்கிறார்கள்.

பத்து வருடங்களுக்கு முந்திய நிகழ்வுகளை எமக்கு ஆதாயம் தந்தவையாக மனதில் எடைபோட்டு, ஆழமாக உணர்ந்து கொண்டால், விடுதலை என்ற எமது இலக்கை அடைவதற்கான ஆன்மபலமாக்குவோம்.

பிரிட்டிஷ் அரசு வழங்கிய

## வைத்திய உபகரணங்கள் கட்டம் கட்டமாகவே வரும்

யாழ்ப்பாணம், ஜூலை 27

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு பிரிட்டிஷ் அரசாங்கம் அன்பளிப்புச் செய்துள்ள 15 கோடி ரூபா பெறுமதியான வைத்திய உபகரணங்களை ஒரே தடவையில் கப்பலில் அனுப்பி வைக்க சுகாதார மகளிர் விவகார அமைச்சு மறுப்புத் தெரிவித்துள்ளது.

வட பகுதிக்கு வரும் உணவுக் கப்பல்களில் இப்பொருள்கள் கட்டம், கட்டமாகவே அனுப்பி வைக்கப்படுமாம்.

இரண்டு கப்பல்களை வடக்கு அமர்த்தி இந்த வைத்திய உபகரணங்களை ஒரே தடவையில் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பிவைக்கும்படி யாழ். போதனா வைத்திய சாலை உயர் அதிகாரிகள் தெரிவித்த யோசனையை சுகாதார மகளிர் விவகார அமைச்சு நிராகரித்துள்ளது.

வடக்குக்கு கப்பலை அமர்த்தி இவற்றை அனுப்பினால் பெரும் செலவு ஏற்படும் என்று யாழ். போதனா வைத்திய சாலை உயர் அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்பட்டதாம்.

வடக்கே வரும் உணவுக் கப்பல்களில் இப்பொருள்களை கட்டம், கட்டமாக அனுப்பி வைக்கும் பட்சத்தில் இப்பொருள்கள் முழுவதும் யாழ் போதனா வைத்திய சாலையை வந்தடைய 6 மாதங்களாவது பிடிக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-17)

### ஆலயங்களில்

யாழ். அத்தியடி ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்திப் பிள்ளையார் கோயிலில் இன்று ஆடிச் செவ்வாய் உற்சவம் காலை 11 மணி தொடக்கம் நடைபெறும். (க)

### நாளை

யாழ். திருமறைக் கலாமன்ற பிரதான வீதிக் கேட்போர் கூடத்தில் நாளை புதன்கிழமை மாலை 5 மணிக்கு பண்பாட்டுக் கருத்தரங்கம் நடைபெறும்.

இயலிசை வாரிதி பிரம்மஸ்ரீ என். வீரமணி ஐயர் "தமிழர் பண்பாட்டில் ஆராத்தி" என்னும் தலைப்பில் கருத்துரை வழங்கவுள்ளார். க-51

o　o　o

வட்டுக்கோட்டை அருள்மிகு அடைக்கலந்தோட்டம் கந்தசுவாமியார் ஆலயத்தில் ஆன்மீகத் தொடர் விரிவுரையாற்றி வரும் சைவமணி திரு. தி. இரட்ணராசா அவர்கள் ஓராண்டு நிறைவு விரிவுரைகளைப் பூர்த்தி செய்ததையொட்டி நாளை புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆலய மண்டபத்தில், விரிவுரையாளரைக் கௌரவிக்கும் விழா நிகழும். (க-16)

o　o　o

குருநகர், ஜூலை 27

சைவ சித்தாந்த ஆய்வு வட்டக் கருத்தரங்கு நாளை மாலை 4 30 மணிக்கு யாழ். பிரதான வீதி, திருமறைக் கலாமன்றக் கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

"சிவஞான போதத்தில் 8 ஆம் சூத்திரம்" பற்றி திரு ஆர் சபாரத்தினம் ஆய்வுரை நிகழ்த்துவார். (உ-51)

### கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 27

வட பிராந்திய லங்கா சோல்ட் லிமிட்டெட்டில் கடமையாற்றி, சுயவிருப்பத்தின் பேரில் சேவையிலிருந்து ஓய்வு பெறுவோருக்கு நஷ்ட ஈடு வழங்குவது தொடர்பான சுற்றறிக்கை ஒன்று லங்கா சோல்ட் லிமிட்டெட் தலைவரினால் தமக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் —

இது பற்றி இறுதி முடிவு எடுப்பது தொடர்பாக எதிர்வரும் 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிராந்திய செயலகத்தில் நடைபெற உள்ள கலந்துரையாடலில் சகல ஊழியர்களையும் கலந்து கொள்ளும்படியும் பிராந்திய முகாமையாளர் திரு. தி. ஸ்ரீ இராமநாதன் கேட்டுக் கொண்டுள்ளார். (த)

### அனுமதி அட்டை கிடைக்கவில்லை

அடுத்த மாதம் இரண்டாம் திகதி ஆரம்பமாகவுள்ள ஜி. சீ. ஈ (உயர்தரப்) பரீட்சைக்கு விண்ணப்பித்த தனிப்பட்ட பரீட்சார்த்திகள் சிலருக்கு அனுமதி அட்டைகள் இன்னமும் கிடைக்கவில்லை என முறையிடப்பட்டுள்ளது.

இதுவரை அனுமதி அட்டைகள் கிடைக்காத தனிப்பட்ட பரீட்சார்த்திகள் யாழ். கல்வி அலுவலக பரீட்சைப் பகுதியினருடன் தொடர்பு கொண்டு தமது பெயர், விண்ணப்பித்த பாட எண்கள் என்பவற்றை பதிவு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக கல்வி அலுவலக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பரீட்சை ஆரம்பமாகுமுன்பாக அவர்களுக்குரிய அனுமதி அட்டைகளை இங்கு வழங்கவும் ஏற்பாடு செய்யப்படுவதாகவும் அவர் சொன்னார். (உ-5)

### நல்லூர் உற்சவகால நிகழ்வுகள்

நல்லூர் கந்தசுவாமி கோவில் மஹோற்சவத்தை ஒட்டி ஆலயச் சுற்றாடலில் இன்று நடைபெற இருக்கும் நிகழ்ச்சிகள் வருமாறு:-

★ நல்லை ஆதீன குருமூர்த்தி மண்டபத்தில்—

பிற்பகல் 2 3 மணி:- 'அருட்திருமேனி' என்னும் பொருளில் சிவஸ்ரீ கை. திருஞான சம்பந்தக் குருக்கள் சொற்பொழிவு

மாலை 5-6 மணி - "ஏறு மயில் ஏறி விளையாடு முகம்" என்னும் பொருளில் பிரசங்க பூஷணம் ந. சிவசண்முகமூர்த்தி சந்தபுராண இசைப் பேருரை.

நல்லூர் ஆலய மேற்கு வீதியில் உள்ள ஸ்ரீ முத்துவிநாயகர் கோயிலில் —

மாலை 5-15 — 6-15: "ஜயாதி" என்னும் பொருளில் கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ வை நித்தியானந்தசர்மா மகாபாரத இசைச் சொற்பொழிவு.

★ நாவலர் மணிமண்டப முன்றிலில்—

மாலை 6 மணி முதல் தெய்வீக இசையரங்கில் சாரதா சச்சிதானந்தம் இன்னிசைக் கச்சேரி.

★ நல்லூர் ஆலயத்துக்கு முன்பாக கச்சேரி — நல்லூர் வீதியில் உள்ள ஸ்ரீ காமாட்சி அம்பாள் மடாலயத்தில்—

பிற்பகல் 3—4-30 மணி வரை: கந்தபுராண படனம். (ஆ-126-11)

வடபகுதியைச் சேர்ந்த

## மேலும் 65 கைதிகளுக்கு விரைவில் புனர்வாழ்வு

வட பகுதியைச் சேர்ந்த மேலும் 65 தடுப்புக் காவல் கைதிகளுக்கு புனர்வாழ்வு வழங்க ஜயலத் கமிஷன் சிபார்சு செய்துள்ளதாக கொழும்புச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

களுத்துறை தமிழ் அரசியல் கைதிகளின் தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களுக்கே புனர்வாழ்வு வழங்கப்பட உள்ளது.

இவர்கள் பல்லேகலையில் உள்ள புனர்வாழ்வு முகாமில் தொழில்நுட்ப பயிற்சி நெறிகளுக்கு உட்படுத்தப்பட்டு 4 மாதங்களின் பின் விடுதலை செய்யப்படுவர் எனவும் கூறப்படுகிறது.

ஏற்கனவே களுத்துறையில் இருந்து வடபகுதியை சேர்ந்த 73 பேர் புனர்வாழ்வுக்கென பல்லேகலைக்கு அனுப்பப்பட்டிருந்தனர். அவர்களில் 41 பேர் அண்மையில் விடுவிக்கப்பட்டனர்.

மேலும் 22 பேர் அடுத்த மாத இறுதியில் விடுவிக்கப்பட உள்ளதாகவும், மிகுதி 10 பேர் [illegible] விடுவிக்கப்படுவர் என்றும் கூறப்படுகிறது. (இ-5)

## லண்டனில் தமிழர் கூட்டத்தில் பிரிட்டிஷ் எம்.பிக்கள்

1983 ஜூலை கலவரத்தை நினைவு கூருமுகமாக கடந்த சனிக்கிழமை லண்டன் ட்ரபல்கார் சதுக்கத்தில் லண்டன் வாழ் தமிழர்கள் நடத்திய பொதுக்கூட்டத்தில் எல்சல்வடோர் விடுதலைப் போராட்டக்குழுவான எப். என். எம். எல் அமைப்பின் பிரதிநிதியும் குர்டிஷ் தொழிலாளர் சங்கப் பிரதிநிதியும் பேசினர்.

அவர்கள் தமிழ்மக்களுக்கு ஆதரவும், அனுதாபமும் தெரிவித்தனர்.

பெரும் எண்ணிக்கையில் தமிழர் வாழும் தொகுதியைச் சேர்ந்த எம். பி. நீல் ஜெரால்ட் பேசினார். தொழில் கட்சி எம். பி. ஜெர்மி கோர்வினும் பேரணியின் இறுதியில் பேசினார்.

ட்ரபல்கார் சதுக்கத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில் சுமார் 2 ஆயிரம் பேர் கலந்து கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ எ)

## 1995ஆம் ஆண்டு முடிவில் 500 தேசிய பாடசாலைகள்!

கொழும்பு, ஜூலை 27

மேலும் 433 பாடசாலைகளை தேசிய பாடசாலைகளாகத் தரமுயர்த்தக் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

தற்போது நாட்டில் 67 தேசியப் பாடசாலைகளே இயங்குகின்றன.

1995ஆம் ஆண்டின் முடிவில் நாட்டில் 500 தேசியப் பாடசாலைகள் இருக்கும் என்று கல்வி அமைச்சு அதிகாரி ஒருவர் கூறினார்.

கூடுதல் தேசியப் பாடசாலைகளை அமைக்கும் முடிவை ஜனாதிபதி விஜேதுங்கா எடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## மண்எண்ணெய் அனுப்ப வெற்றுப் பரல் இல்லையாம்

யாழ்ப்பாணம், ஜூலை 27

வெற்றுப் பரல்களுக்கு கொழும்பில் ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு காரணமாக வடக்கே மண்எண்ணெய் அனுப்பும் பணி பாதிக்கப்பட்டிருப்பதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

யாழ். மாவட்டத்துக்கு மாதாந்தம் 5 ஆயிரம் பரல் மண்எண்ணெய் அனுப்புவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதும், இம்மாதம் இரண்டாயிரத்து 100 பரல் மட்டுமே 'றுகுணு' கப்பல் மூலம் அனுப்பப்பட்டது.

வெற்றுப் பரல்களுக்குத் தட்டுப்பாடு நிலவுவதால் மாதாந்தம் 5 ஆயிரம் பரல் மண்எண்ணெயை அனுப்ப முடியாதிருப்பதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனம் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சுக்கு தெரிவித்துள்ளது.

31 ஆம் திகதிக்கு முன்

## குடும்ப அட்டை பெற விண்ணப்பிக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 27

இதுவரை குடும்ப அட்டைக்கு விண்ணப்பிக்காதவர்களும், பூரணமான விவரங்களைப் பதியாதவர்களும் இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன் தத்தமது பகுதி கிராமசேவையாளர்களிடம் விண்ணப்பிக்குமாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவு கேட்டுள்ளது.

ஒன்றுக்குமேற்பட்ட குடும்ப அட்டைகளை வைத்திருப்பவர்களும் அவற்றை இம்மாத இறுதிக்கு முன் கிராமசேவையாளரிடம் ஒப்படைப்பதன் மூலம் அநாவசியசிரமங்களைத் தவிர்த்துக் கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமான மேலதிக விவரங்கள் ஜூன் 21 ஆம் திகதி உதயனில் வெளியாகியிருந்தது குறிப்பிடத்தக்கது.

## தபால் அடையாள அட்டை; விண்ணப்பிக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 27

தபால் அடையாள அட்டைகளுக்கு விண்ணப்பிக்கும் பரீட்சார்த்திகள் காலந் தாழ்த்தாது பரீட்சைகளுக்கு முன் கூட்டியே விண்ணப்பிக்குமாறு வடமாகாண பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் திரு. எஸ். எம். சேதுகாவலர் அறிவித்துள்ளார்.

பாடசாலை அதிபர்களும் இதை கவனத்தில் கொண்டு மாணவர்களுக்கு அறிவுறுத்துமாறும்—

தபால் அடையாள அட்டைகளை வழங்குவதற்கான வெற்று அட்டைகள் தற்போது போதுமான அளவில் கையிருப்பில் உள்ளதாகவும்—

மாணவர்கள் முன் கூட்டியே விண்ணப்பித்தால் வெற்று அட்டைகள் முடிவடையும் பட்சத்தில் அவற்றை கொழும்பிலிருந்து தருவிக்கலாம் என்றும் அவர் சொன்னார். (த-162)

### இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 27

லெப்டினன்ட் கேணல் சராவின் 2 ஆவது ஆண்டு நினைவு தினத்தையொட்டி இன்று காலை எட்டு மணிக்கு கல்வியங்காட்டில் உள்ள செல்லக்கிளி நினைவாலயத்தில் உள்ள லெப்டினன்ட் கேணல் சராவின் திருவுருவப் படத்துக்கு மலர்மாலை அணிவிக்கும் நிகழ்ச்சி நடைபெறும்.

இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டை திருநெல்வேலி கிழக்கு வாலையம்மன் சன சமூகநிலையம் செய்துள்ளது. (உ-3)

## நாவிலும் உறைபவன் நீ நல்லை முருகா

இராகம்: பரமேஸ்வரி　　தாளம்: ஆதி

பல்லவி

யாவிலும் நிறைபவன் நீ நல்லை முருகா - என்தன்
நாவிலும் உறைபவன் நீ நல்லைக்குமரா - அழகா!

அனுபல்லவி

ஏற்பவர் எதிர்ப்பவர் நெஞ்சமெல்லாம் - நீ
ஏற்றிடும் எழில்சிந்தும் கோவில்லையா - முருகா!

சரணம்

தேனிலும் சுவையாக நிறைந்திருப்பாய் - கொடும்
தேளிலும் விடமாகச் செறிந்திருப்பாய் - புவி
யாவிலும் யாவுமாய்க் கலந்திருப்பாய் - என்தன்
பாவிலும் யாவுமாய் இணைந்திருப்பாய் - குமரா!

- முருகு -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருத்தித்துறைப் பகுதியில்

# மூளை மலேரியாவால் அதிகமானோர் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 27

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கடந்த 6 மாத காலத்தில் 332 பேர் மூளை மலேரியாவினால் பாதிக்கப்பட்டனர்.

ஏனைய பிரிவுகளுடன் ஒப்பிடும்போது இத்தொகை அதிகம் ஆகும்.

மாவட்ட மலேரியாத் தடுப்பு இயக்கத்தினர் மேற்கொண்டு வரும் ஆய்வுகளில் இருந்து இத்தகவல் வெளியாகி உள்ளது. இந்தக் காலப் பகுதியில் கிளிநொச்சி, யாழ்ப்பாணம் உள்ளிட்ட வட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பகுதியில் 9,583 பேர் மலேரியாவால் பாதிக்கப்பட்டனர்.

இவர்களில் 8,658 பேர் சாதாரண மலேரியாவினாலும், 925 பேர் மூளை மலேரியாவினாலும் பாதிக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-162)

## 2 ஆவது டெஸ்ட் இன்று ஆரம்பம்

இலங்கை, இந்திய கிரிக்கெட் அணிகளுக்கு இடையேயான இரண்டாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டி இன்று கொழும்பில் ஆரம்பமாகிறது.

முதலாவது டெஸ்ட் ஆட்டம் மழை காரணமாகக் கைவிடப்பட்டது தெரிந்ததே.

## போட்டிப் பரீட்சைகளுக்கு விண்ணப்பிக்கலாம்!

யாழ்ப்பாணம், ஜூலை 27

எழுதுவினைஞர் சேவை, தட்டெழுத்தாளர் சேவை, இற்றூழியர்களை தரமுயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்குரிய விண்ணப்பங்களும் —

இலங்கை வெளிநாட்டுச் சேவை 3ஆம் தரத்திற்கு ஆட்களைச் சேர்ப்பதற்கான வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்களும் —

இரண்டாம் தர கிராம உத்தியோகத்தர்களை முதலாம் தரத்திற்கு பதவி உயர்த்தும் போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்களும் கோரப்பட்டுள்ளன. இம்மாதம் 2ஆம் திகதிய வர்த்தமானியில் இது தொடர்பான விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

## தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்க முடியாது அவதி

யாழ். மாவட்டத்தில் 16 வயது பூர்த்தி அடைந்த பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்க முடியாமல் அவதியுறுகின்றனர்.

யாழ். மாவட்ட அரசாங்க செயலக பதிவுகாரர் அலுவலகத்தில் 1954 ஆம் ஆண்டுக்கு பின்னர் பிறந்தவர்களுக்குரிய பிறப்புச் சான்றுப் பத்திரங்கள் எழுதுவதற்கான படிவங்கள் முடிவடைந்துவிட்டன.

இதனாலேயே 1954 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பிறந்த மாணவர்கள் அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்க முடியாமல் அவதியுறுகின்றனர்.

யாழ். அரசாங்கச் செயலக அடையாள அட்டைத் திணைக்களம், பிறப்புப் பத்திரத்தின் முழுப் பிரதியின் நிழற்பிரதியை உறுதிப்படுத்தி அடையாள அட்டை விண்ணப்பத்துடன் இணைக்குமாறு கிராம உத்தியோகத்தர்களுக்குச் சுற்றுநிருபம் அனுப்பியிருப்பது குறிப்பிடத்தக்கது. (இ-175)

## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### திரு: முத்துக்குமாரு ஸ்ரீகுமார்

(ராசாண்ணை)

அன்னையின் மடியில்: 29—07—1946

அநியாய அழிப்பில்: 27—07—1983

கண்ணீர்த் துளிகளை மலர்களாயெடுத்து,
காலமெலாம் நினைந்தே வணங்குவோம்.
பத்தாண்டு பறந்தும் பாசமோ விட்டிடோம்.
எந்நாளும் உம் நினைவில் நனைந்தே.
எண்ணச் சுடரை ஏற்றுவோம் ராசாவே!

உன் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
அம்மா, மாமி,
சகோதர, சகோதரிகள்,
மைத்துனர், மைத்துனிகள்.

சேச் ஒழுங்கை,
உரும்பராய் கிழக்கு,
உரும்பராய்.

(26676)

## செய்திக் கொத்து

### பயன் குறைவு

அளவெட்டிப் பகுதியில் இம்முறை சிறுதானியப் பயிர்ச் செய்கை பெருமளவில் செய்யப்பட்ட போதிலும் காற்றாலும் கால நிலையாலும் எதிர்பார்த்த பயன்பெற முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (க-18)

### இடுகாடு புனரமைப்பு

கொழும்புத்துறை இந்த இடுகாடு திருத்தி அமைக்கப்பட்டு வருகிறது. இம்மாத இறுதியில் இடுகாட்டு மடத்தில் அந்தியேட்டிக் கிரியைகளைச் செய்யக்கூடியதாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. (க-30)

### குரக்கன் ஒட்டு விற்க முடியவில்லை

சுழிபுரம், பண்ணாகம் கிராமங்களில் குரக்கன் ஒட்டை விற்க முடியாத நிலைமை ஒன்று ஏற்பட்டுள்ளது. இதனால் கமக்காரர் குரக்கன் ஒட்டை வேண்டியவர்கள் வெட்டிச் செல்ல விட்டுள்ளனர்.

### நீரைத் தேக்க நடவடிக்கை

சந்தரோடை உத்திரிக்கை குளத்தை ஆழமாக்கியும் அணைகளை உயர்த்தியும் நீரைத் தேக்கும் முயற்சியில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஈடுபட்டுள்ளது. (க-13)

### வல்லை வெளியில் குளம் அமைப்பு

பெருமளவில் நீரைத் தேக்க வல்லை வெளியில் பாரிய குளம் தன்னைத் தோண்டும் வேலை நடைபெறுகிறது. (க-155)

### லியோ கழக பதவியேற்பு

சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி ஆகியவற்றின் லியோ கழக நிர்வாகத்தினரின் பதவியேற்பு வைபவம் கடந்த 18ஆம் திகதி மேற்படி கல்லூரி மண்டபங்களில் நடைபெற்றன. (க-117)

### புதிய சகடை உபயம்

அளவெட்டி தெற்கு வயல்வெளி முத்துமாரி அம்மன் கோவிலுக்கு புதிய சகடை ஒன்றை திரு மா. சின்னத்தம்பி கடந்த புதன்கிழமை உபயமாக வழங்கினார்.

### கடற்கரை வீதி அமைப்பு

குடாரப்புக்கும், நாகர் கோவிலுக்குமிடையே, நான்கு கிலோ மீற்றர் நீளமான கடற்கரை வீதி புதிதாக அமைக்கப்பட்டுள்ளது; யாழ். மாவட்ட மனித முன்னேற்ற நடுநிலையம் (கியூடெக்) இவ் வீதியை அமைத்து உதவியுள்ளது. (க-144)

### ஆணையாளர் கோரிக்கை

யாழ். மாநகர சபையின் கிளை நூலகங்களின் நூல்கள் மற்றும் தளபாட வசதிகளை அதிகரிப்பதற்காக ஜனாதிபதி நிதியிலிருந்து நிதி உதவி வழங்கும்படி அண்மையில் கொழும்பு சென்றிருந்த யாழ். மாநகர சபை ஆணையாளர் ஜனாதிபதியின் ஆலோசகர் திரு. பிரட்மன் வீரக்கோனிடம் கோரிக்கை விடுத்தார். (க-162)

### சித்திரத் தேர்

அல்வாய் வேவிலந்தை அருள்மிகு முத்துமாரி அம்மன் ஆலயத்திற்கு சித்திரத் தேர் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது. (க)

# அராலியில் இலைக்கஞ்சி வழங்க நடவடிக்கை

அராலி, ஜூலை 27

அராலி மேற்கு கோட்டைக் காட்டுப் பகுதியில் சிறுவர்களுக்கு போசாக்கு உணவாக இலைக் கஞ்சியை வழங்க பெற்றோர்கள் ஊக்குவிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான நடவடிக்கையை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சு. டிவகலாலா மேற்கொண்டுள்ளார்.

இப்பகுதியில் உள்ள இரண்டு சனசமூக நிலையங்களூடாக இலைக் கஞ்சி சமைத்து வழங்கவும் ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

வயல்களில் கூலி வேலை செய்து வந்த பலரும், மீன்பிடித் தொழில் செய்து வந்த பலரும் இப்பகுதியில் வேலை அற்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-12)

## நிரந்தர நியமனம்

கொழும்பு, ஜூலை 27

பொது நிருவாக, மாகாண சபைகள் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் இல. 14/93 நிருவாகச் சுற்றறிக்கையின்படி அரச திணைக்களங்கள் முதலியவற்றில் 1-4-92க்கு முன்னர் இருந்து அமைய, தற்காலிக, பதில் பணியாளர்களாகத் தொடர்ந்து தொழில் புரிவோருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளது.

நிரந்தர நியமனங்களை 1-5-93க்கு முன் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று இச்சுற்றறிக்கை அமைச்சுகள், திணைக்களங்கள், அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள், சட்ட நியதிச் சபைகள் ஆகியவற்றைக் கோரியுள்ளது. (க)

## பயணிகளுடன்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். வதிவிடப் பிரதிநிதி திரு. பியட் கிவைட்ஸர் கேட்டுள்ளார்.

எதிர்வரும் 30 ஆம் திகதி கொழும்பு செல்லும் அரச ஊழியர்களுடன் திருகோணமலை செல்லுங் "குமண" கப்பல், அடுத்த மாதம் முதலாம் திகதி பருத்தித்துறைக்கு மீண்டும் வந்து சேரும் என்றும்—

அன்று மாலையே கொழும்பு செல்லும் நோயாளர்களுடன் அது திருமலைக்கு செல்லும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## குடாநாட்டில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெடித்துச் சிதறின. இதனால் அப்பகுதி மக்கள் பெரும் பதற்றம் அடைந்தனர்.

தெல்லிப்பளையில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் நேற்று முன்தினம் இரவும் பின்னர் நேற்றுக்காலை 10 மணியளவிலும் ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர். இதனால் துர்க்கை அம்மன் ஆலயத்திற்கு அருகில் இருந்த இரு வீடுகள் சேதமடைந்தன.

மண்டைதீவு இராணுவ முகாமிலிருந்தும் நேற்று முன்தினம் இரவு யாழ் கரையோரப் பகுதிகளை நோக்கி தாக்குதல் நடத்தப்பட்டது. (உ-15-17-28-143-162)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சாரதா நாகையா

திருமதி சாரதா நாகையா அவர்கள் 25-7-93 அன்று கொழும்பில் அகால மரணமானார். இவர் காலஞ்சென்ற சின்னையா நாகையா அவர்களின் அன்பு மனைவியும், பாலசங்கர், சாந்தினி, குமரன் ஆகியோரின் அருமைத் தாயாரும், சுருவிலூர் சு. அருணாசலம், மீனாட்சிஅம்மா ஆகியோரின் அன்பு மகளும் ஆனந்தராஜா (Accountant), Dr. மகேந்திரராஜா, சரோஜாதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், பவானி, பரந்தா, Dr. நச்சினார்க்கினியன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார். ஈமக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும்.

தகவல்:
Dr. செ. சு. நச்சினார்க்கினியன்

பழமுதிர்சோலை,
பொற்பதி வீதி,
கொக்குவில். (26693)

## திருமதி சின்னத்துரை நாகம்மா

வண்ணாங்கேணி, கண்டிவீதி, பளையை பிறப்பிடமாகக் கொண்ட சேமன் சின்னத்துரையின் மனைவி நாகம்மா 26-07-93 இல் காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பளையிலுள்ள அவரது இல்லத்தில் இன்று (27-07-93) செவ்வாய்க்கிழமை பி.ப. 2 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் மலையான் காட்டு மயானத்திற்கு தகனக் கிரிகைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகிறோம்.

சி. சுந்தரலிங்கம் (மகன்)
பிள்ளைகள், உறவினர்கள்

விஷ்ணு கிரி,
வண்ணாங் கேணி,
பளை. (26696)

## திருமதி ஞானம்மா இராசையா

திருமதி ஞானம்மா இராசையா கொழும்பில் காலமானார். அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு இராசையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற முதலித்தம்பி - சிவகாமிப்பிள்ளை தம்பதிகளின் புதல்வியும், நாகேஸ்வரன் (சுவிஸ்), ரோகிணீஸ்வரி, ஜெகதீஸ்வரன் (சுவிஸ்), மகேஸ்வரன் (சுவிஸ்), காலஞ்சென்றவர்களான குகனேஸ்வரி, சிவனேஸ்வரி, கமலேஸ்வரி, செல்வனேஸ்வரி ஆகியோரின் அருமைத் தாயாரும், ஞானபூரணம், இராசரத்தினம், அன்னம்மா, சிவபாக்கியம், அகபதி, கைலாயநாதன் (உதவிக் காணி ஆணையாளர், செயலகம், யாழ்ப்பாணம்), காலஞ்சென்றவர்களான இராசதுரை, குமாரலிங்கம் ஆகியோரின் சகோதரியும், யோகநாதன் (ஆசிரியர், யா/கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாசாலை), அருந்ததி (சுவிஸ்) ஆகியோரின் மாமியாரும், அருண்ராஜ் (சுவிஸ்), மதுரஷாவின் பேர்த்தியும், வயிரவப்பிள்ளை, காலஞ்சென்றவர்களான அன்னலிங்கம் சோமசுந்தரம், மகாலிங்கம், திருமதி நா. செல்லையா ஆகியோரின் மைத்துனியும், இரத்தினம், பூமாலை ஆகியோரின் சம்பந்தியும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும். ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
இ. யோகநாதன்
(மருமகன்)

"இராசஞானபவன்"
சிவகாமி அம்மன் கோயிலடி,
இணுவில். (26697)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 298/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 27-07-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org